# சுற்றுச்சூழல் – வனத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 54

## வனம்

## 2015–2016


**எம்.எஸ்.எம். ஆனந்தன்**
**அமைச்சர் – வனம்**



©
தமிழ்நாடு அரசு
2015

# மானியக் கோரிக்கை எண். 54

# கொள்கை விளக்கக்குறிப்பு – 2015–2016

# வனத்துறை

## முன்னுரை

மனித வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் வனங்கள், சுற்றுச்சூழல் நிலைத்தன்மைப் பாதுகாப்பிற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் சீரிய பங்காற்றி வருகின்றன. வனங்கள் மண் வளத்தினைப் பேணி, நீர்வளத்தினை உறுதி செய்வதில் பெரும் பங்காற்றி வேளாண் நிலங்களை செழிப்பாக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன. வன நிலங்களையும், அவற்றின் வளங்களையும் பாதுகாப்பது மட்டுமன்றி உற்பத்தித் திறனை மேம்படுத்துவதும் வன மேலாண்மையின் குறிக்கோளாகும்.

வனம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தமிழ்நாட்டில் பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு வரும் நடைமுறையாகும். இது இயற்கையினை நாம் மதிக்கக் கற்றுக்கொடுத்தது மட்டுமின்றி, உயிரினங்கள் மற்றும்

உயிரற்றவைகள் இடையே உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளவும் வழிவகை செய்துள்ளது. நாட்டில் உள்ள வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாத்து, சுற்றுச்சூழலை மேம்படுத்துவது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு **48–**A ன் கீழ் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல அனைத்து உயிர்களிடத்தும் கருணை காட்டுவது, வனங்கள், ஏரிகள், ஆறுகள், வன உயிரினங்கள் உள்ளிட்ட இயற்கைச்சூழலை பாதுகாத்து மேம்படுத்துவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும் என்று இந்திய அரசியலமைப்புச்சட்டம், பிரிவு **51** A (g) எடுத்துரைக்கிறது. இக்குறிக்கோள்கள் தமிழ்நாட்டின் வன மேலாண்மையை வழிநடத்திச் செல்கின்றன.

## 2. வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றம்

கடலோர மற்றும் தீவுகளின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் நலிவடைந்த சமுதாயத்தினர் மற்றும் இயற்கை வளங்களுக்கு பருவநிலை மாற்றம் மற்றும் புவிவெப்பமடைதல் மிகப்பெரிய சவாலாக விளங்கி வருகிறது. உலக அளவிலான இச்சவாலை எதிர்கொள்ள இம்மாநிலமானது பருவநிலை மாற்றத் தணிப்பு மற்றும்

ஒத்திசைவு எனும் அணுகுமுறையினைக் கடைபிடித்து வருகிறது. வனங்களின் தரம் மற்றும் அடர்த்தியினை அதிகரித்து, அவற்றின் கரித்துகள் உட்கிரகிப்பு ஆற்றலைப் பெருக்கி பருவநிலை மாற்றத் தணிப்பினை உறுதி செய்யும் பணியில் வனத்துறை முக்கிய பங்காற்றி வருகிறது. பருவநிலை மாற்ற ஒத்திசைவுக்கான சமுதாய முயற்சிகளுக்கு மாநில வனத்துறையின் திட்டங்களும் துணைபுரிகின்றன.

## 3. வனம் மற்றும் மர அடர்த்திப்பரப்பு

தமிழ்நாட்டின் மொத்த வனப்பரப்பளவு 22,877 சதுர கிலோமீட்டர். இது தமிழ்நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவில் 17.59 விழுக்காடு ஆகும். இந்திய வன நில அளவை நிறுவன (வனநிலை அறிக்கை, 2013) அறிக்கையின் படி வன அடர்த்திப் பரப்பு 23,844 சதுர கிலோ மீட்டராக உள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் 18.33 விழுக்காடு ஆகும். மேலும், 1988ஆம் ஆண்டின் தேசிய வனக்கொள்கையின் படி, நிலப்பரப்பில் 33.33 விழுக்காடு அளவு வனம் மற்றும் மர அடர்த்திப் பரப்பாக இருக்க வேண்டிய நிலையில், வனம் மற்றும் மர அடர்த்திப் பரப்பு

28,710 சதுர கிலோமீட்டராக உள்ளது எனவும், இது மொத்த நிலப்பரப்பில் 22.07 விழுக்காடு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4. வனக்கொள்கை

அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிபுரியும் சூழலியல் சமநிலையினைப் பராமரித்தல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையினை உறுதி செய்தல் போன்றவை வனக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும். மாநிலத்தின் வனம் மற்றும் மரங்களின் அடர்த்திப் பரப்பினைப் பாதுகாத்தல் மற்றும் அதிகரித்தல் போன்றவற்றில் அனைத்துத் தரப்பினரையும் பங்கேற்கச் செய்வது இக்கொள்கையின் ஒரு முக்கிய அம்சமாகும். இலக்கினை அடையத்தேவையான மேலாண்மை அணுகுமுறைகள் இக்கொள்கையில் வரையறுக்கப் பட்டுள்ளது.

## 5. வன மேலாண்மையின் குறிக்கோள்கள்

தமிழ்நாட்டிலுள்ள வனங்கள், பெருகிவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்ய,

பின்வரும் பரந்த குறிக்கோள்களுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன:–

- வனங்கள் மற்றும் வன உயிரினப்பாதுகாப்பின் மூலம் உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளப்பாதுகாப்பு.
- வனப்பகுதிகளில் நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல்.
- தரம் மற்றும் உற்பத்தி இருப்பினை அதிகரிக்க தரங்குன்றிய காடுகளைப் புனரமைத்தல் மற்றும் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல்.
- வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார செழுமைக்கென வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகப்படுத்துதல்.
- உறுதியான சமூகப் பொருளாதார நிலைத்தன்மைக்காக பழங்குடியினர் மற்றும் வனங்களைச் சார்ந்து வாழும் சமுதாயத்தினரின் நலன் மேம்பாடு.

## 6. செயல்முறைகள்

மேற்படி குறிக்கோள்களை அடைய, அதிவேகமாக மாறிவரும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப வனப்பொருட்கள் மற்றும் சேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புகளை வழங்க கீழ்க்கண்ட வன செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

1. உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளப்பாதுகாப்பு.
2. புவியியல் மற்றும் கடல்சார் நில அமைப்புகளில் வன உயிரின மேலாண்மை.
3. நீர்வளப் பெருக்கத்திற்கான நீர்ப்பிடிப்புப்பகுதி பாதுகாப்பு.
4. கார்பன் இருப்பினை அதிகரித்தல் மற்றும் பருவநிலை மாற்றத் தணிப்பு.
5. வனச்செழுமை மற்றும் பாதுகாப்பு.
6. வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகப்படுத்துதல்.
7. வனம் சார்ந்த சமுதாயத்தினரின் சமூகப் பொருளாதார மேம்பாடு.
8. பழங்குடியினர் மேம்பாடு.

9. மக்கள் ஆதரவுடன் சூழல் சுற்றுலா.
10. உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டினை பலப்படுத்தல்.
11. ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம்.
12. புவித்தகவல் அமைப்பு, மேலாண்மைத் தகவல் அமைப்பு மற்றும் மின்ஆளுமை (E-Governance) செயல்பாடு.
13. மனித வள மேலாண்மை.

### 6.1. உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளப்பாதுகாப்பு

**6.1.1.** தமிழ்நாட்டின் பதிவு செய்யப்பட்ட வனப்பரப்பு 22,877 சதுர கிலோமீட்டர் ஆகும். இதில் காப்புக் காடுகளின் பரப்பு 19,464 சதுர கிலோ மீட்டராகவும், காப்பு நிலங்களின் பரப்பு 2,159 சதுர கிலோ மீட்டராகவும், இதர வனங்கள் 1,254 சதுர கிலோ மீட்டராகவும் உள்ளது. மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் 46 வன ஆட்சிக்கோட்டங்கள் மூலமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இக்கோட்டங்களில் அறிவியல் ரீதியாக உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளங்கள் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றது. இந்த வனங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அதிக அளவில் உயிர்ப்பன்மை

மற்றும் மரங்கள், மூலிகைத் தாவரங்கள் போன்ற மரபியல் வளங்களைத் தன்னகத்தே கொண்டு பொருளாதார மற்றும் சமுதாய மேம்பாட்டிற்கு ஆதாரமாக விளங்குகின்றன. பெருமளவு தாவர மற்றும் விலங்கின வகைகளைக் கொண்டுள்ள மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள், புதிய உயிர்வள ஆதாரங்கள் குறித்த ஆய்வினை மேற்கொள்ள ஏதுவாக உள்ளன. பல்லுயிர்ப்பரவல் சட்டம், 2002 மற்றும் அது தொடர்பான விதிகள், 2004ல் வலியுறுத்தப்பட்டுள்ளபடி அனுமதி மற்றும் பயன்பங்கீட்டிற்கு ஆதாரமாக மரபியல் வளங்கள் அமைந்துள்ளன.

**6.1.2.** மாநிலத்தின் முக்கிய உயிர்ப்பன்மை வளங்களை மேலாண்மை செய்வதற்கென அமைக்கப்பட்ட பல்லுயிர் பரவல் வாரியமானது, அதற்கென வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது. வனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைசிறந்த மர இனங்கள், வேளாண் வனவியல், தோட்ட வனவியல் மற்றும் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு உள்ளிட்ட வனங்களுக்கு வெளியே மரம் வளர்ப்புக்கு சிறந்த ஆதாரங்களாக பயன்பட்டு வருகின்றன.

**6.1.3.** ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் உயிர்ப்பன்மைப்பாதுகாப்பினை முதன்மையான குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து வனக்கோட்டங்களின் வனச்செயல்திட்டங்கள் மாநிலத்தின் உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன.

## 6.2. புவியியல் மற்றும் கடல்சார் நில அமைப்புகளில் வன உயிரின மேலாண்மை

**6.2.1.** வன வளங்கள் மற்றும் வன உயிரினம் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 2013–14–ஆம் ஆண்டு வரை, வன உயிரினப்பாதுகாப்பு மற்றும் உயிர்ப்பன்மை பாதுகாப்பினை பலப்படுத்தும் வகையில் **6,708.14** சதுர கிலோ மீட்டர் பரப்பு, பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டது. 2014–15ஆம் ஆண்டில், 356.73 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 'நெல்லை வன உயிரினச் சரணாலயம்'

மற்றும் 4.85 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சுசீந்திரம்–தேரூர்–மணக்குடி ஏரிப்பகுதி ஒதுக்குப் பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறாக மாநிலத்தின் வனப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மொத்தப் பரப்பு 7,069.72 சதுர கிலோமீட்டராக (30.9 விழுக்காடு) உள்ளது. பாதுகாக்கப்பட்ட பகுதி கட்டமைப்பின் கீழ் களக்காடு முண்டந்துறை, ஆனைமலை, முதுமலை மற்றும் சத்தியமங்கலம் என 4 புலிகள் காப்பகங்கள், 5 தேசிய பூங்காக்கள், 15 வனஉயிரினச் சரணாலயங்கள், 14 பறவைகள் சரணாலயங்கள் மற்றும் இரண்டு பாதுகாக்கப்பட்ட ஒதுக்குப்பகுதிகள் ஆகியவை உள்ளன. இப்பாதுகாக்கப்பட்ட பகுதிகள் வன உயிரினப் பாதுகாப்புச்சட்டம், 1972ன் கீழ் ஏற்படுத்தப்பட்டன. உயிர்ப்பன்மை செழுமைக்குப் பெயர்பெற்ற நீலகிரி, மன்னார் வளைகுடா மற்றும் அகஸ்தியர்மலை என மூன்று உயிர்க்கோள் காப்பகங்களைக் கொண்ட தனிச்சிறப்பு வாய்ந்த மாநிலமாகவும் தமிழகம் திகழ்கிறது. மேற்குத்தொடர்ச்சி மலை உலகின் 25 முக்கியமான

உயிர்ப்பன்மைத் தலங்களில் ஒன்றாகவும், இந்தியாவின் மூன்று உள்ளூர் தாவர பேரிட மையங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. கன்னியாகுமரி, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம், முக்குருத்தி, ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் மேகமலை வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளதால் தாவர மற்றும் உயிரினச் செழுமைக்குப் பெயர்பெற்று விளங்குகிறது. வனஉயிரினப் பகுதிகளைச் சுற்றியுள்ள சிக்கல்களுக்கு மேலாண்மைத் திட்டக் குறிப்புகள் வாயிலாக இடம் சார்ந்த புலமை கொண்டு தீர்வு காணப்படுகின்றன.

**6.2.2.** கணிசமான அளவில் வனஉயிரினங்கள் மிகுந்த வாழ்விடங்கள், உள்ளூர் இனங்கள், முக்கிய உயிரினங்கள், முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பகுதிகள் மற்றும் பெரிய பாலூட்டி வழித்தடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இப்பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உள்ளன. உயிர்ப்பன்மை, கல்வி, பொழுதுபோக்கு, வரலாற்று முக்கியத்துவம், தனிச்சிறப்பு மிக்க நிலப்பகுதிகள் மற்றும் கடற்பகுதிகள் போன்றவற்றின்

பாதுகாப்பிற்கென மாநிலத்திலுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மேலாண்மை செய்யப்படுகிறது.

**6.2.3.** நிலவாழ் விலங்கினப் பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கைகள் மட்டுமின்றி, கடல் சார் தேசிய பூங்காக்களை அறிவிக்கை செய்து, கடல்வாழ் தாவர மற்றும் விலங்கினப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளையும், தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

**6.2.4.** யானைகள் தமது உணவு, தீவனம் மற்றும் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இடப்பெயர்ச்சி மேற்கொள்ள ஏதுவாக அவற்றிற்குரிய 13 வழித்தடங்களை வன உயிரின நிபுணர் குழுக்கள் கண்டறிந்துள்ளனர்.

**6.2.5.** மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் பல்வேறு புலிகள் வாழ்விடங்களை ஏற்படுத்திப் பாதுகாப்பதில், மாநில அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகள் வாயிலாக 2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 163 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2014ஆம் ஆண்டில் 229 ஆக

உயர்ந்துள்ளது. மேற்கண்ட காலகட்டத்தில், தேசிய அளவில் புலிகளின் எண்ணிக்கை 30 விழுக்காடு அதிகரித்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் 40 விழுக்காடாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமல்லாது பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு உள்ளேயும், வெளியேயும், வன உயிரின மேலாண்மையின் வாயிலாக அனைத்து உயிரினங்களின் பாதுகாப்பிற்கும் உரிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**6.2.6.** வனஉயிரினப் பாதுகாப்பிற்கென தமிழ்நாட்டில் பின்வரும் உயிரியல் பூங்காக்கள் இந்திய மத்திய உயிரியல் பூங்கா குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்வுயிரியல் பூங்காக்கள் அருகி வரும் உயிரினங்களின் பாதுகாப்பு, கல்வி, ஆராய்ச்சி மற்றும் வனஉயிரின நலவாழ்வு குறித்த ஆய்வுகள் மற்றும் பொழுதுபோக்கு போன்றவற்றில் முக்கிய பங்காற்றி வருகின்றன:–

1. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், சென்னை.
2. கிண்டி சிறுவர் பூங்கா, சென்னை.
3. அமிர்தி உயிரியல் பூங்கா, வேலூர்.

4. குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, சேலம்.
5. திருச்சிராப்பள்ளி உயிரியல் பூங்கா, திருச்சி.

## 6.3. நீர்வளப் பெருக்கத்திற்கான நீர்ப்பிடிப்புப்பகுதி மேலாண்மை

மண், நீர் மற்றும் பிற இயற்கை வளங்களைப் பாதுகாப்பதே நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மையின் குறிக்கோளாகும். தமிழ்நாடு வற்றாத மற்றும் வற்றக்கூடிய ஆறுகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, கிழக்கு திசை நோக்கி பாய்கின்றன. மாநிலத்திலுள்ள 32 ஆறுகள், 11 பெரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் 61 பெரிய பாசனக்கட்டமைப்புகளுக்கான நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 85 விழுக்காடு வனங்களில் அமைந்துள்ளன. நீர்ப்பிரிமுகடுகளில் நிலையான நீரோட்டம், உயிரியல் நிலைத் தன்மையினை உறுதிசெய்ய நீராதாரச் சூழ்நிலையினைத் தக்கவைத்து, நீர்ப்பிரிமுகடு மேலாண்மை மற்றும் நீர்வளப்பெருக்க அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படுகிறது. நன்னீர் சூழலமைப்புகள் நெருக்கடிக்கு உள்ளாகின்றன. நீர்ப்பிரிமுகடு திட்டங்களின் வாயிலாக படுகையோர வனச்

செழுமையினைப் பாதுகாத்து, ஆறுகளின் தரத்தினை அறிந்து கொள்ள அறிவியல் ரீதியாக கண்காணிக்கும் பணியினை துறையானது மேற்கொண்டு வருகிறது. இனங்களின் கூட்டமைப்பு மற்றும் வளர்ச்சியில் ஏற்பட்ட மாறுதல்களை அளவிடுவதன் மூலம் நீர்ப்பிரிமுகடு இயக்கவியல் குறித்த தகவல்கள் பெறப்பட்டுள்ளன. சூழல் சார்ந்த வளமான நீர்ப்பிரிமுகடுகளை இயல்பான நிலைக்கு கொண்டுவரவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மை உதவிபுரிகிறது. நீர்வளத்தினை சேகரிக்கும் பொருட்டு, தாழ்வான நீரோட்டப்பகுதிகளில் தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க்குட்டைகள் போன்ற பெரிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இக்கட்டமைப்புகள் சேகரிப்புக் கொள்கலன்களாக செயல்படுவது மட்டுமின்றி, நிலத்தடி நீர்வளத்தினை செறிவூட்டல் மற்றும் இயற்கை ஊற்றுகளின் மறுசெறிவூட்டல் போன்றவற்றிற்கு ஊக்குவிப்பானாகவும் செயல்படுகின்றன. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், தேசிய காடு வளர்ப்புத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

போன்ற முக்கிய காடு வளர்ப்புத் திட்டங்கள் இந்த அணுகுமுறையைப் பின்பற்றி வருகின்றன. இவ்வாறே, நீரை சேகரித்து நிலத்தடி நீரூற்றுகளை செறிவூட்ட தரங்குன்றிய வனப்பகுதிகளில் நீர் பாதுகாப்பு மற்றும் மர அடர்த்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் சிறப்பாக மேலாண்மை செய்யப்படுகிறது.

## 6.4. கார்பன் இருப்பினை அதிகரித்தல் மற்றும் பருவநிலை மாற்றத் தணிப்பு

உலக வெப்பமயமாதலுடன் தொடர்புடைய பருவநிலையில் ஏற்படும் மாற்றங்கள் வனங்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தவல்லது. இன்றைய காலகட்டத்தில் பருவநிலை மாற்றத்தினைப் பொறுத்தவரை, வனங்களில் கார்பன் சேமிப்புத்திறன் மற்றும் பருவநிலை மாற்றத் தணிப்பில் அதன் பங்களிப்பு மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் வன அடர்த்திப்பரப்பு பருவநிலை மாற்றங்களுக்கு விதி விலக்கானது அல்ல. மாநிலத்தில் சமுதாயத்தினரின் இடர்களை அதிகரித்து அவர்களை

வறுமை நிலைக்கு கொண்டு செல்வதால், காடுகளின் பாதுகாப்பு மற்றும் தரங்குன்றி வரும் வனச் சூழலமைப்பினை இயல்பு நிலைக்குக் கொண்டு வருதல் போன்றவை மிகவும் முக்கியமானதாகும். வனங்களின் தரத்தினை மேம்படுத்த நீரறு பள்ள அடைப்பு (Gully plugging), சமதளக்குழிகள் (Contour trenches), தாவரத்தடுப்புகள் (Vegetative barriers), நீர்ப்பிடிப்புக் குழிகள் (Catch water pits) போன்ற மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்புப் பணிகள் மண்அரிமானத்தைத் தடுக்க மாநிலத்தின் வனப் பகுதிகளில் மேற்கொள்ளப் படுகின்றன. மேலும், களையெடுப்பதன் வாயிலாக ஊடுருவிய அயற்தாவர வகைகளை நீக்குதல், இயற்கை மறுதளிர்வுக்கு உதவிபுரிய இடைநடவு மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் முக்கியமாக தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், தேசிய காடு வளர்ப்புத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருவநிலை இணக்கத்தன்மையினைப் பெருக்க நிலஅமைப்பு அடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட

வனங்களில் 'பசுமை இந்தியா பணித்திட்டம்' (Green India Mission) தொடங்கப்பட்டுள்ளது.

### 6.5. வனச்செழுமை மற்றும் பாதுகாப்பு

**6.5.1.** மாநிலத்தின் வனங்களுக்கு மனிதத் தலையீடுகளால் ஊறு விளைவிக்கப்படுவதுடன், பல்வேறு காரணிகளால் வனவளங்கள் தொடர்ந்து இன்னல்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல், வனத் தீ, வனநிலங்கள் ஆக்கிரமிப்பு, சந்தனமர கடத்தல், மேய்ச்சல், கஞ்சா பயிரிடுதல், மருத்துவத்தாவரங்கள் களவாடப்படுதல் மற்றும் வன உயிரினங்கள் வேட்டையாடப்படுதல் போன்றவை மாநிலத்தின் வனவளப் பாதுகாப்பிற்கு தொடர்ந்து சவால்களாக விளங்குகின்றன. சட்டத்திற்குப் புறம்பான இச்செயல்களை தடுக்க துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் நல்ல பலனைத் தந்துள்ளன. வனக்குற்றங்களைக் கட்டுப்படுத்த தற்போது பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவின் கீழ் 13 வனப்பாதுகாப்புப் படைகள், வடக்குக்குழு (7 வனப்பாதுகாப்புப் படைகள்) மற்றும் தெற்குக்குழு

(6 வனப்பாதுகாப்புப் படைகள்) என இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், 5 பறக்கும் படைகளும் இதற்கென இயங்கி வருகின்றன. மாநிலம் முழுவதும் 17 வன நிலையங்கள், 112 வனச்சோதனைச் சாவடிகள் மற்றும் 11 சுழல் தணிக்கைச் சாவடிகளும் முக்கியமான மற்றும் பதட்டமான இடங்களில் இயங்கி வருகின்றன.

**6.5.2.** துறையின் வனப்பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவானது, வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் குறித்து சேகரித்த தகவல்களை சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பி வைக்கிறது. நவீனத் தடுப்புமுறைகள் மற்றும் ரோந்து யுக்திகள், குற்ற முறைமைகளைக் கையாளுதல் போன்றவற்றில் வனப் பணியாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி உள்ளிட்ட சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. எல்லைக்கற்களை நட்டு வன எல்லைகளை ஒருங்கிணைத்தல், ஏற்கனவே உள்ள தீக்கோடுகள் பராமரிப்பு மற்றும் புதிய தீக்கோடுகள் வெட்டுதல் போன்றவற்றிற்காக வனத்தீத்தடுப்பு, கூட்டு வன நிர்வாகக் குழுக்களை ஏற்படுத்தி உள்ளூர் மக்களை

தீத்தடுப்புப் பணிகளில் ஈடுபடுத்துதல், வறண்ட காலங்களில் தீத்தடுப்புக் காவலர்களை வழக்கமான அடிப்படையில் பணியமர்த்தல், தீ கண்காணிப்பு கோபுரங்கள் கட்டுதல் மற்றும் வேட்டைத்தடுப்புக் காவலர்களை பணியமர்த்தல், கஞ்சா பயிரிடுதல் போன்ற சட்டவிரோத செயல்களுக்கு வனநிலங்களைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் போன்ற பாதுகாப்புப் பணிகளும் இதில் அடங்கும். வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பதில், துறையின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு முக்கிய பங்காற்றியுள்ளது.

**6.5.3.** வன வளத்தினை வறட்சி, தீ, பருவநிலை மாற்றம், பூச்சிகள் மற்றும் நோய்கள் போன்ற பல்வேறு காரணிகளிலிருந்து பாதுகாப்பது ஒரு சவாலாக இருந்து வருகிறது. இயற்கை நிகழ்வுகள் மற்றும் மனிதத் தலையீடுகள் காரணமாக வனங்களின் தரம் பாதிக்கப்படுவதுடன், உயிரின வகைபாடு, வனக்கட்டமைப்பு, உற்பத்தித்திறன், வன உயிரின வாழ்விடங்கள் ஆகியன பாதிக்கப்படுகின்றன. வனங்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் குறைப்பதற்கு, பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு சாரா தொண்டு

நிறுவனங்களுடன் இணைந்த கூட்டுத் திட்டங்கள் வாயிலாக வன வளம் குறித்த கண்காணிப்பு மேற்கொள்வது அவசியமாகும். இதன் மூலம் வனங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

## 6.6. வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகப்படுத்துதல்

**6.6.1.** சூழலமைப்பினை மேம்படுத்த நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு மர அடர்த்திப் பரப்பினைக் கொண்டு வர வேண்டும் என 1988ஆம் ஆண்டின் தேசிய வனக்கொள்கை வலியுறுத்துகிறது. அறிவிக்கை செய்யப்பட்ட வனப்பரப்பினை அதிகரிக்க வாய்ப்பு மிகவும் குறைவு என்ற காரணத்தினால், வனங்களுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகரிக்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இக்குறிக்கோளினை எய்த, தனியார் பண்ணை நிலங்கள், தரிசு நிலங்கள், கண்மாய்கள், பிற புறம்போக்கு நிலங்கள், சாலையோரங்கள், இருப்புப் பாதையோரங்கள் மற்றும் கால்வாய்க்கரைகள் போன்ற பிற பொது நிலங்களிலும், வனங்களுக்கு

வெளியேயும் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இலாபகரமானதாகவும், வறட்சியைத் தாங்கக் கூடியதாகவும் உள்ள மரக்கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன.

**6.6.2.** காற்றின் மாசினைக் குறைத்தல், ஒலியின் மாசினைக் குறைத்தல், கார்பன் கிரகிப்பு மற்றும் கால்வாய்க் கரைகளில் மண் அரிப்பினைத் தடுத்தல் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் பலன்களை அடைவது மட்டுமின்றி, வனப்பொருட்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வனப்பகுதிகளுக்கு வெளியே மர வளங்களை உருவாக்குவதே மையக்கருத்தாக உள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உதவி பெறும் தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம், மாபெரும் மரம் நடவுத் திட்டம், படுகை நிலங்களில் தேக்கு மரத்தோட்டங்கள் வளர்த்தல், கண்மாய் தோட்டங்கள் வளர்த்தல் போன்ற முக்கிய திட்டங்கள் தேசிய இலக்கான **33.33** விழுக்காடு மர அடர்த்திப் பரப்பினை அடைய செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் விறகு மரம் மற்றும் தடிமரத்தின் எதிர்கால தேவை மற்றும் ஆதாரத்திற்கு

இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க உறுதுணையாக இருக்கும்.

## 6.7. வனம் சார்ந்த சமுதாயத்தினரின் சமூகப் பொருளாதார மேம்பாடு

**6.7.1.** வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கு பண்ணைகளையும், வனங்களையும் சார்ந்தே இருக்க வேண்டியுள்ளது. வனங்களின் தரங்குன்றுதல் காரணமாக வனங்களை ஒட்டியுள்ள சமுதாயத்தினர் வாழ்வாதார வழிமுறைகளை இழக்க நேரிடுவதால், ஏழ்மை நிலை வேரூன்றுகிறது. வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் உள்ள மக்களின் நம்பிக்கை மற்றும் மதிப்பினை பெறுவதற்குண்டான சீரிய முயற்சிகளை வனத்துறை மேற்கொண்டு வருகிறது. வனத்துறை வழக்கமான பாதுகாப்புப் பணிகள் மட்டுமின்றி வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டு வரும் துறையாக மாறிவருவதை இக்கிராமங்களில் வசிக்கும் மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

**6.7.2.** ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த தமிழ்நாடு காடு

வளர்ப்புத் திட்டத்தின் இரண்டு கட்டங்களிலும், வனங்களை ஒட்டியுள்ள **2,317** கிராம மக்களின் உளமார்ந்த பங்கேற்புடன் கூட்டு வன நிர்வாகத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு வறுமை ஒழிப்பே முக்கிய வழியெனக் கொண்டு, அனைத்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமங்களிலும் இடைதாங்கு மண்டலப் பணிகளை மேற்கொண்டது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், நிலையான வாழ்வாதாரத் தேவையான மாற்று வேலை வாய்ப்பு வழிமுறைகளை உருவாக்குவதில் வலுவான தடை தகர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அரசின் பிற துறைகள் ஒருங்கிணைப்பின் விளைவாக, வனம் மற்றும் அதனைச் சார்ந்து வசிக்கும் சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்கென அதிக ஆதாரங்கள் மற்றும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டு கட்டங்களின் கீழ் பெறப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் தற்போதைய அணுகுமுறை கையாளப்படுகிறது. வனங்களில் மட்டுமின்றி அதனை ஒட்டி வாழும் கிராம மக்களின்

இணக்கமான சூழ்நிலைக்கான மேம்படுத்தப்பட்ட வாய்ப்புகள், வனப்பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் அவர்களது பங்கேற்புக்கான முயற்சிகளில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கான அணுகுமுறை, (i) சமுதாய மூலதனத்தை ஏற்படுத்த தனிநபர் வருமானப் பெருக்கம் மற்றும் (ii) இயற்கை வள ஆதார நடவடிக்கைகளை முன்னிறுத்தி இயற்கை மூலதனப் பெருக்கப்பணிகள் போன்ற இரு ஆதாரங்களின் அடிப்படையில் அமையும். பாரம்பரியத் திறன்கள் மற்றும் உள்ளார்ந்த அறிவாற்றல் போன்றவை பாதுகாப்புப் பலன்களுக்கு பயன்படுத்தப்படும்.

## 6.8. பழங்குடியினர் மேம்பாடு

**6.8.1.** பழங்குடியினர் இயற்கை வளங்களை அழிக்காமல், அவற்றை நிலையான முறையில் பயன்படுத்தி இயற்கையோடு இணக்கமாக வாழ்ந்து வருவதுடன் வன மேலாண்மை மற்றும் வனப்பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் வனத்துறைக்கு உதவிபுரிகின்றனர். பழங்குடியினர் வனங்களுடன் இணைந்து இருப்பது வனப்பாதுகாப்பிற்கு நன்மை பயப்பதாக உள்ளது. அரசின் கொள்கைகளும்,

பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த சிறப்புத் திட்டங்களின் அவசியத்தினை வலியுறுத்துகின்றன. எனவே, பழங்குடியினருக்கு கல்வி, வேலை வாய்ப்புப் பெருக்கம் மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகளை வழங்குதல் போன்ற பணிகளில் வனத்துறை ஈடுபட்டு வருகிறது. 1951 ஆம் ஆண்டிலேயே வனத்துறையால் ஜவ்வாது மலைவாழ் பழங்குடியினருக்கு ஜம்னாமரத்தூரில் துவங்கப்பட்ட தொடக்கக்கல்வி பிற கிராமங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. திருவண்ணாமலை, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் பகுதிகளில் 20 பள்ளிகளை நடத்தி வரும் தமிழ்நாடு வனத்துறை குறிப்பாக பழங்குடியினருக்கு சிறந்த கல்வியினை வழங்க சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 4500க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர்கள் கல்வி பயில்கின்றனர். வனத்துறை மூலம் நடத்தப்பட்டு வரும் பழங்குடியினர் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில், முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ–மாணவியருக்கு பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. வனப்பொருட்கள் உற்பத்தியில் பழங்குடியினரின் முக்கிய பங்கினை

உணர்ந்து, அவர்கள் சிறுவனப்பொருட்களை இலவசமாக சேகரிக்கவும், பயன்படுத்தவும், ஆணைகள் வழங்கப் பட்டுள்ளன. வனத்துறையானது அனைத்து முக்கிய காடு வளர்ப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகளிலும் பழங்குடியினரின் சேவைகளைப் பயன்படுத்தி வருகிறது. இதன் வாயிலாக வனப்பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் அவர்களது பங்கேற்பும், வனங்களில் இயைந்த உயிர்வாழ்வும் சாத்தியமாகியுள்ளது.

**6.8.2.** வனப்பாதுகாப்பில் உள்ளூர் பழங்குடியின மக்களை ஈடுபடுத்தும் நோக்கத்தில், உள்ளூர் பழங்குடியின இளைஞர்களை பழங்குடியின வேட்டைத்தடுப்புக் காவலர்களாக பணியமர்த்தும் சிறப்பு முயற்சியினை வனத்துறை மேற்கொண்டுள்ளது.

**6.8.3.** வனத்துறையானது பழங்குடியினர் கல்விக்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. பழங்குடியினர் நல்வாழ்வுத்துறையின் ஒத்துழைப்புடன், அனைத்துப் பழங்குடியினர் பள்ளிகளும் புதுப்பிக்கப்படுவதுடன்,

பழங்குடியினர் கல்வித்தரமும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

**6.8.4.** வனத்துறையின் பணிகளில் பழங்குடியினருக்கு வீட்டு வசதி ஏற்பாடு என்பதும் முக்கியமான ஒன்றாகும். பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த மிகவும் உள்ளடங்கிய பழங்குடியினர் பகுதிகளில் உள்ள பழங்குடியின வீடுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

**6.8.5.** உள்ளடங்கிய பழங்குடியினர் பகுதிகளில் தொடர்புவசதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த வனத்துறையானது, பழங்குடியின சிற்றூர்களுக்கு இடையேயான தொடர்புச் சாலைகளை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. மேலும், நடப்பாண்டில் பழங்குடியினர் நலத்துறையின் உதவியுடன், பல ஆண்டுகாலமாக நிலுவையில் இருந்த பச்சைமலையில் உள்ள ஏரிக்காடு முதல் குண்டூர் வரையிலான சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**6.8.6.** பழங்குடியினர் கிராம வனக்குழுக்களின் வாயிலாக 100 விழுக்காடு சிறுவனப் பொருட்களை

பழங்குடியினருக்கு வழங்குவதில் தமிழ்நாடு வனத்துறை ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.

## 6.9. மக்கள் ஆதரவுடன் சூழல் சுற்றுலா

**6.9.1.** மாறுபட்ட புவியியல் அமைப்பு மற்றும் தட்பவெப்ப மண்டலங்களுடன், எழில், கலைநயம், சமூகப் பண்பாடு மற்றும் கல்வி அடிப்படையில் இயற்கையினை அதன் உன்னத நிலையில் கண்டுகளிக்க பல்வேறு வனப்பகுதிகளைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் உள்ள தொட்டபெட்டா போன்ற சில உயரமான சிகரங்கள் ஒருபுறமும், கடலோர சமவெளிகள் போன்றவை மறுபுறமும் வனங்களில் அமைந்துள்ளன. மேலும், சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், முத்துப்பேட்டை மற்றும் பிச்சாவரம் போன்ற சதுப்புநிலப்பகுதிகள் மற்றும் கடலோர மணற்குன்றுகள் உள்ளிட்ட வனப்பகுதிகள் சூழல் சுற்றுலா வழிவகைகளை மேம்படுத்த அதிக வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

**6.9.2.** இயற்கைத் தலங்களைப் பாதுகாத்து வந்தபோதிலும், உள்ளூர் மக்களுக்கு கணிசமான

வாழ்வாதாரங்களை உருவாக்கும் மிகப்பெரிய ஆற்றல் சூழல் சுற்றுலாவிற்கு உள்ளது. சூழல் சுற்றுலா என்பது இயற்கையின் அடிப்படையில் அமைந்த, நிலைத்து நிற்கக்கூடிய சூழல் மற்றும் சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளத்தக்க பணியாகக் கருதப்படுகிறது. இப்பணி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்பாடு மற்றும் உள்ளூர் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொழுதுபோக்கு அனுபவத்தினை மேம்படுத்துவதாக அமைகிறது. வெற்றிகரமான சூழல் சுற்றுலாவிற்கு, பார்வையாளர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், வனப் பணியாளர்களுக்கு திறன் அதிகரிப்பு மற்றும் பயிற்சித் திட்டங்கள், விளம்பரம், வரவேற்பு மையங்கள் ஏற்படுத்துதல், பார்வையாளர்களுக்கு வாகன வசதிகள், பறவைகள் மற்றும் உயிரினச் சரணாலயங்களில் கண்காணிப்பு கோபுரங்கள், தொலைநோக்கிகள் மற்றும் பார்வையாளர்களுக்கு சூழல் வழிகாட்டிகள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**6.9.3.** மாநிலத்தில் பங்கேற்பு சூழல்சுற்றுலாவினை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு உயிர்ப்பன்மை

பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் 25 சூழல் சுற்றுலாத் தலங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் உள்ளூர் சமுதாயத்தினரின் பங்கேற்புடன் சூழல் சுற்றுலாப்பணிகள் தொடங்கப்பெற்றுள்ளன. அவ்வாறே, சூழல் சுற்றுலாவிற்கு உகந்த பச்சைமலை போன்ற பகுதிகளில், மாவட்ட நிர்வாகம் மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் சூழல் சுற்றுலாப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6.10. உள்கட்டமைப்பு வசதியை பலப்படுத்துதல்

**6.10.1.** வனத்துறை சிறப்பான முறையில் இயங்க கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு, உபகரணங்கள், செயல்விளக்க மையங்கள், பணியாளர் குடியிருப்புகள் மற்றும் வாகனங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமான ஒன்றாகும். அதே நேரத்தில் வனப்பகுதியில் உள்ள உள்கட்டமைப்புகளான சாலைகள், வீட்டுவசதி, பள்ளிகள் மற்றும் மருந்தகங்களை மேம்படுத்துவதும் அவசியமாகும். வனத்துறையில் பெரும்பாலான பணியாளர்கள் தொலைதூரப் பகுதிகளில் பணியாற்றுவதால், குடியிருப்பு, அலுவல் குடியிருப்பு,

பாதுகாப்புக் கட்டமைப்புகளான சோதனைச்சாவடிகள், வேட்டைத்தடுப்பு முகாம்கள் மற்றும் கண்காணிப்புக் கோபுரங்கள் போன்றவை தேவைக்கேற்ப அமைக்கப்படுவதுடன், ஏற்கனவே உள்ள துறைக் கட்டடங்களின் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**6.10.2.** வனத்துறையின் கட்டுப்பாட்டில் **1,631.5** கி.மீ. நீளமுள்ள சிமெண்ட், தார் மற்றும் கல் பரப்பிய சாலைகள், **1,718.5** கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள், உள்ளிட்ட **3,350** கி.மீ. நீளமுள்ள வனச்சாலைகள் உள்ளன. வனப்பகுதிகளில் பாதுகாப்புப் பணியாளர் மற்றும் தொழிலாளர் போக்குவரத்து, தடிமர மற்றும் பிற வனப்பொருட்களை அருகிலுள்ள சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு வனச்சாலைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு அவசியமாகிறது. மேலும், உள்ளடங்கிய வனப்பகுதிகளில் உயர்அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களின் காலமுறைத் தணிக்கைகள், சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் மற்றும் விலையுயர்ந்த தடிமரங்களின் கடத்தல்கள் போன்றவற்றைத் தடுக்கவும், வனச்சாலைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள்

தேவைப்படுகிறது. தகவல் தொடர்பு வசதிகளை பலப்படுத்த, பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களுக்கு வாகனங்கள், ஜி.பி.எஸ். உபகரணங்கள் (GPS), செல்போன்கள் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.11. வன ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம்

**6.11.1.** வலுவான வன விழிப்புணர்வு, ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்க ஆதாரங்களின் மூலமே நம்பகமான மற்றும் உறுதியான வன மேலாண்மைத் தொகுப்புகள் மற்றும் செயல்முறைகளைத் தோற்றுவிக்கமுடியும். வனங்களின் தாக்கத்தினை உணர்ந்த பின்பு, சூழலியல் பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான அறிவியல் சார்ந்த வனவியல் ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தனியார் நிலங்களில் மரங்கள் வளர்க்க உதவி புரிதல், விதை உயிரியல், மருத்துவத் தாவரங்கள் பாதுகாப்பு, சிறுவனப் பொருட்கள் மற்றும் அறுவடைக்குப் பின் பின்னேர்த்தி செய்யும் தொழில்நுட்பம் போன்ற நவீனப் பரிமாண

வனப்பணிகளுக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. வனங்களின் தரத்தினை மேம்படுத்துதல், உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு, உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும் மக்கள் பயனடையும் வண்ணம் நீடித்த பொருட்கள் மற்றும் சேவைகளை உறுதி செய்தல் ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழக வன ஆராய்ச்சிப் பிரிவு செயல்பட்டு வருகிறது. வேளாண்–பருவநிலை மண்டலங்களில் உள்ள ஆராய்ச்சி மையங்களில் முக்கிய மரவகைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட எண்ணிலடங்கா தேவை அடிப்படையிலான லாபகரமான ஆராய்ச்சி சோதனைகளின் வாயிலாக மரவளர்ப்பு மற்றும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான ஆதாரங்கள் குறித்த அரிய தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இத்தகவல்கள் மாவட்டத்திலுள்ள வன விரிவாக்க மையங்களின் வாயிலாக களத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. பல்நோக்கு மரவகைகள், மரம் சாரா வனப்பொருட்கள் மற்றும் மரவியல், உயிர்ப்பன்மை பாதுகாப்பு, சூழலியலின் இயல்புநிலை, மண்வள மேலாண்மை, மருத்துவத் தாவரங்கள் மேம்பாடு மற்றும் பராமரிப்பு, உயிர் உரங்கள் தயாரிப்பு, அறுவடைக்குப் பின்

பின்னோர்த்தி செய்யும் தொழில்நுட்பம் போன்ற முக்கிய பகுதிகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தனியார் நிலங்களில் மர வளர்ப்பு முயற்சிகளின் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் வெற்றிகரமாக தரங்குன்றிய காடுகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் புனரமைத்தல் போன்றவற்றிற்காக வனஆராய்ச்சியின் சிறப்பான சாதனைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் களத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தரமான நாற்று இருப்பு உற்பத்தி மற்றும் விதையில்லா நாற்று உற்பத்தி போன்றவற்றிற்காக மர இனவிருத்தியில் வன ஆராய்ச்சிப் பிரிவு அதிக கவனம் செலுத்தி வருகிறது. வனமரபியல் வளங்களைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் வேகமாக வளரக்கூடிய மரங்களைக் கண்டறிதல், நோய்களைத் தாங்கி வளரக்கூடிய மரவகைகள் மற்றும் பல்வேறு வகையில் பயன்படக்கூடிய மரவகைகளை தேர்வு செய்தல் போன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**6.11.2.** தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் இயற்கை வள

ஆதாரங்களை அதிகரிக்க பல்வேறு வகையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனங்களுக்கு வெளியே மரஉற்பத்தியினை அதிகரிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு வேளாண் பருவநிலை பகுதிகளில் உற்பத்தி வனவியல் மற்றும் வேளாண் வனவியல் ஆகியவற்றில் மேலாண்மைப் பங்களிப்பு அவசியமாகிறது. மரவணிகம் மற்றும் மரங்களல்லாத வனப்பொருட்கள் மேலாண்மையில் ஆராய்ச்சி துவங்கப் பெற்றுள்ளது. உண்ணிச்செடி மற்றும் வேலிக்கருவேல் போன்ற அயற்தாவர வகைகள் மீதும் ஆராய்ச்சி மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளது.

**6.11.3.** இயற்கை வனப்பகுதிகளுக்கு வெளியே மர வளங்களை விரிவுபடுத்தவும், பெருகிவரும் வனப்பொருட்களின் தேவையினை பூர்த்தி செய்யவும், **31** வனவிரிவாக்க மையங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் முள்ளில்லா மூங்கில், சவுக்கு, தேக்கு, வேம்பு, மலைவேம்பு, ஒட்டுப்புளி, நெல்லி போன்ற தரமான மரக்கன்றுகளை வளர்க்கத் தேவையான வனவிரிவாக்க சேவைகள் மற்றும்

தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின்றன. இம்மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் பயிரிடப்பட்டு, பண்ணை நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட செயல்விளக்கத் தோட்டங்களாக செயல்படுகின்றன. இவ்வன விரிவாக்கப் பிரிவு சூழல் கல்விக்கான ஆதாரம் மற்றும் இளைஞர் மற்றும் சிறுவர்களிடையே கலந்துரையாடலுக்கான தூண்டுகோலாகவும் விளங்குகிறது. தமிழ்நாடு சமூக வனவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சங்கம் (SSFRDT) எனும் அரசு சாரா தொண்டு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து, பல்வேறு மாவட்டங்களில் மர வளர்ப்போர் சங்கத்தினை உருவாக்கும் பணிகளை வனவிரிவாக்கப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. பல்வேறு மண் மற்றும் வேளாண் தட்பவெப்ப நிலைகளுக்கு உகந்த மரவகைகளை பரிந்துரைத்தல், மர வளர்ப்புக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவுத்திறனை வளர்த்தல், விற்பனை குறித்த தகவல்களை வழங்குதல், மரங்கள் மற்றும் தடிமரம் அல்லாத வனப்பொருட்களை வாங்குவோருடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளையும் செய்து வருகிறது.

## 6.12. புவித்தகவல் அமைப்பு (GIS), மேலாண்மைத்தகவல் அமைப்பு (MIS) மற்றும் மின்ஆளுமை (E-Governance) செயல்பாடு மற்றும் மேம்பாடு

வனவியல் என்பது மனித வள மேம்பாடு, நிலம் சார்ந்த தகவல், திட்டம் தொடர்பான செயல்பாடுகள், உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகள், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம், பொதுப்பயன்கள் குறித்த விரிவான தகவல்தொகுப்புகளை உள்ளடக்கியது. வனவியல் பிரிவில் திட்டமிடுதல், மேலாண்மை மற்றும் கண்காணிப்பு போன்றவற்றில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு முக்கிய பங்காற்றி வருகிறது. எனவே, சிறந்த வன மேலாண்மை நடைமுறைக்கு புவித்தகவல் அமைப்பு இன்றியமையாததாக உள்ளது. இத்தொழில்நுட்பத்தின் குறிப்பிட்ட செயல்முறைகள் வன அடர்த்திப்பரப்பு / வகைபாடு வரைபடம் மற்றும் மாற்றப் பகுப்பாய்விலும், மாவட்ட வாரியான வன வரைபடத் தயாரிப்பிலும், வனத் தீ கண்காணிப்பிலும், வனச்செயல் திட்டம் / மேலாண்மைத் திட்ட தயாரிப்பிலும் செவ்வனே பயன்படுத்தப்பட்டு வருகிறது. செயற்கைக்கோள் பிம்பத்தொலையுணர்வு

மற்றும் புவித்தகவல் அமைப்பு உதவியுடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் மின்னணு வன வரைபடங்கள் தயாரிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிழக்குத்தொடர்ச்சி மலை மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை முழுவதற்கும் செயற்கைக்கோள் பிம்பத்தினைப் பயன்படுத்தி வனத் தீ வரைபடங்கள் தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது. இவ்வரைபடங்கள் கோட்டங்களில் வனத் தீ மேலாண்மைக்கு உதவிபுரிகின்றன. மேலாண்மைத் தகவல் அமைப்பு என்பது முறையான மற்றும் சிறப்பான மேலாண்மைப் பணிகளுக்கான ஒரு மிக முக்கியமான சாதனமாகும். இது காலமுறை முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், உரிய நேரத்தில் தீர்வு காணுதல் போன்றவற்றில் உதவிபுரிகிறது. துறையின் தகவல் மேலாண்மைக்கு உதவிபுரிய, நிர்வாகத்தில் தகவல் தொழில் நுட்பத்தினை செம்மையாகப் பயன்படுத்துவது தவிர்க்க இயலாதது. தமிழ்நாடு வனத்துறையினை தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் மாற்றியமைக்க, எளிதில் பயன்படுத்தும் வகையில் இணைய அடிப்படையிலான மேலாண்மைத் தகவல் அமைப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டு

வருகிறது. தேசிய மின்ஆளுமை செயல் திட்டத்தின், பிரதான மின்ஆளுமைக் கட்டமைப்பில் ஒன்றாக தமிழ்நாடு மாநில பரந்த பகுதி வலையமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய வளர்ச்சிகளை முறையாகப் பயன்படுத்தி, பரந்த பகுதி வலையமைப்புடன் கூடிய நிறைவான மேலாண்மைத்தகவல் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, வனத்துறைப் பணியாளர்களின் திறன் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது.

## 6.13. மனித வள மேலாண்மை

**6.13.1.** மாநிலத்தின் மிகப் பழமையான துறைகளில் ஒன்றான வனத்துறையில் வனவியல் பிரிவில் முக்கிய பங்காற்றி வரும் மனித வளம், இத்துறையின் மிக முக்கியமான உடைமைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. திறம்படைத்த மனித வளத்தின் வாயிலாக வனத்துறை மாநிலத்தில் வனங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் பல ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. தற்போது துறையிலுள்ள முதுநிலை, இடைநிலை மற்றும் இளநிலை அளவில் உள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி

அளிப்பதற்கென கோயம்புத்தூரில் தமிழ்நாடு வன உயர்பயிற்சியகம் மற்றும் வைகை அணையில் தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரி ஆகிய இரு பயிற்சி நிலையங்களை, வனத்துறை நடத்தி வருகிறது.

**6.13.2.** கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வன உயர்பயிற்சியகத்தில் வனச்சரக அலுவலர்களுக்கும், வனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறே, வைகை அணையிலுள்ள தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரியில் வனக்காப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வனம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்பின் போது ஏற்படும் சவால்களை திறம்பட மேற்கொள்வதற்கான சிறப்புப்பயிற்சி வனப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மேம்பட்ட தாவர உற்பத்தித் தொழில்நுட்பங்கள், வன உயிரின மேலாண்மை, சட்ட நுணுக்கங்கள், உயிர்ப்பன்மை பாதுகாப்பு, ஆயுதப்பயன்பாடு, தீ கட்டுப்படுத்தல், ஜி.பி.எஸ். (GPS) மற்றும் புவித்தகவல் அமைப்பு பயன்பாடு, கட்டடப்பணிகள் வடிவமைப்பு, மரத்தொழில்நுட்பம், பொது மக்கள் பங்கேற்புடன் வன மேலாண்மை குறித்து அலுவலர்கள், சார்நிலைப்பணியாளர்கள், அமைச்சுப்

பணியாளர்கள், கிராம வனக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு உரிய கால அளவிலான / புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**6.13.3.** மேலும், நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் வனக்காவலர் பணியிடங்களில் 30 விழுக்காடு காலிப்பணியிடங்களை, மலைப்பகுதி மாவட்டங்களில் வசிக்கும் பழங்குடியினர்களைக் கொண்டு அவர்களது தகுதியின் அடிப்படையில் நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7. 2014–15ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- மாநிலத்தின் 15வது வன உயிரினச் சரணாலயமாக நெல்லை வனஉயிரினச் சரணாலயம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம்–தேரூர்–மணக்குடி ஏரிப்பகுதி, தமிழ்நாட்டின் இரண்டாவது ஒதுக்குப் பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

- மிகைப் பணியிட வேட்டைத் தடுப்புக்காவலர்கள் மற்றும் மிகைப் பணியிட தோட்டக் காவலர்கள் பயன்பெறும் வண்ணம் மாதந்தோறும் இடர்படியாக ரூ.400/– வழங்கப்பட்டு வருகிறது.

- சந்தனமரக்கட்டைகள் பொது ஏலம் மூலம் 51.43 மெட்ரிக் டன் அளவு விற்பனை செய்யப்பட்டு, அரசுக்கு வருவாயாக ரூ.38.36 கோடி ஈட்டப்பட்டுள்ளது.

- தேக்கு மரக்கட்டைகள் பொது ஏலம் மூலம் 1054.96 கன மீட்டர் விற்பனை செய்யப்பட்டு, அரசுக்கு வருவாயாக ரூ.2.98 கோடி ஈட்டப்பட்டுள்ளது.

- சமூகக்காடுகள் தோட்டங்களில் முதிர்ந்த மரங்கள் விற்பனை மூலம் ரூ.17.76 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற வருவாயில், ரூ.6.77 கோடி பங்குத் தொகையினை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு, ஊரக வளர்ச்சி

மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் வாயிலாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வன உயர் பயிற்சியகம் வனச்சரகர்களுக்கான தேசிய பயிற்சி மையமாக மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 513.73 எக்டேர் பரப்பிலான நிலங்கள் காப்புக்காடுகளாகவும், 1274.45 எக்டேர் பரப்பிலான நிலங்கள் காப்பு நிலங்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

- வனத்துறையில் காலியாக உள்ள 181 வனவர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப, தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர் தேர்வுக்குழுமத்தின் வாயிலாக அறிவிக்கை வெளியிடப்பட்டு, மாநில அளவிலான தேர்வு முதன்முதலாக 22.02.2015 அன்று நடத்தப்பட்டது.

## 8. தமிழ்நாடு வனத்துறையின் பொன்னான தருணங்கள்

### 8.1 குடியரசுதின விழா அணிவகுப்பில் பங்கேற்பு

தமிழ்நாடு வனத்துறை **26.01.2015** அன்று சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான குடியரசு தின விழா அணிவகுப்பில் முதல்முறையாக பங்கேற்றது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும்.

### 8.2. தமிழ்நாட்டில் புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் **20.01.2015** அன்று புதுடில்லியில் 'இந்தியாவில் புலிகளின் நிலை, **2014**' என்ற அறிக்கையினை வெளியிட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், **2011** கணக்கெடுப்பின் படி **163** ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, கணிசமாக உயர்ந்து **2014**ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி **229** ஆக அதிகரித்துள்ளது.

## 8.3. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய விருது

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படும் 'மக்கள் தொடர்பில் சிறந்த யுக்திகளுக்குரிய' விருதினை ஆனைமலை புலிகள் காப்பகம் **2012–14**ஆம் ஆண்டில் பெற்றுள்ளது.

## 8.4. வெள்ளிவிழா கண்ட களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

மேற்குத் தொடர்ச்சி மலையின் முக்கிய உயிர்ப்பன்மைத் தலமாகவும், தமிழ்நாட்டின் முதல் புலிகள் காப்பகமாகவும் விளங்கும் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் **2013–14**ஆம் ஆண்டில் **25** ஆண்டுகள் நிறைவு செய்து வெள்ளிவிழா கண்டுள்ளது.

## 8.5. குறைந்த அளவு மாற்றம் செய்யப்பட்ட வனநிலங்கள்

வனச்சட்டங்களை தீவிரமாக நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு எப்போதும் வனப்பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளில் முன்னோடியாக விளங்கி வருகிறது.

நாட்டிலேயே தமிழகம், வனமற்ற பணிகளுக்கு வனநிலங்களை மிகவும் குறைந்த அளவில் பயன்படுத்தி வருசிறது. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான காலத்தில், 374 இனங்களில் சுமார் 4,490 எக்டேர் பரப்பு மட்டுமே வனமற்ற பணிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 8.6. பயிற்சி வனச்சரக அலுவலராக மகளிரும் தேர்வு

ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 79 வனச்சரக அலுவலர்கள் (வனப்பணி பயில்பவர்) தேர்வு செய்யப்பட்டு, ஒதுக்கீடு செய்யப் பட்டனர். 63 ஆண்கள் மற்றும் 11 பெண்கள் உள்ளிட்ட 74 வனப்பணி பயில்பவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். தமிழ்நாடு வனத்துறையின் வரலாற்றில் முதன்முறையாக மகளிர், வனச்சரக அலுவலர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

# 9. வன வருவாய் மற்றும் செலவினம்

## 9.1. வன வருவாய்

சந்தன மர விற்பனை, தடிமர விற்பனை மற்றும் பண்ணைக் காடுத்தோட்டங்கள் விற்பனை ஆகியன

வனவருவாய்க்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன (இணைப்பு–1). பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே விற்பனைக்காக அறுவடை செய்யப் படுகின்றன. 30 ஆண்டுகளுக்கும் மேலான முதிர்ந்த தேக்கு மரங்கள் ஆண்டுதோறும் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. சீகை மற்றும் தைலமரத் தோட்டங்களிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்கள், சம்பந்தப்பட்ட காகித மற்றும் தொழிற்சாலைகளுக்கு அரசினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. கண்மாய்களில் வளர்க்கப்படும் கருவேல் மரங்கள் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருவாய் ஈட்டப்படுகிறது.

## 9.2. செலவினம்

காடு வளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, பல்வேறு சரணாலயங்கள் மற்றும் புலிகள் காப்பகங்களில் வாழ்விட மேம்பாட்டுப் பணிகள், வனச்செல்வங்களைப் பாதுகாக்க முக்கியத்துவம் அளித்தல், ஊரக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் சிறந்த முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரவுசெலவுத்

திட்டத்தில் இத்திட்டங்களுக்கான உரிய நிதி ஒதுக்கீடு விவரங்கள் இணைப்பு–2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. 2015–16ஆம் ஆண்டில் தொடரும் முக்கியத் திட்டப்பணிகள்

**மாநில அரசின் திட்டங்கள்:**

### 10.1. தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் **2011–12**ஆம் ஆண்டு முதல் ரூ.**686** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் 'தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்' **2018–19**ஆம் ஆண்டு வரை தொடரப்படும். வனப்பாதுகாப்பின் வாயிலாக உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் மற்றும் பழங்குடியின சமுதாயத்தினரின் சமூகப்பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வனங்களுக்கு வெளியே தனியார் நிலங்களில் மர வளர்ப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் மர அடர்த்திப் பரப்பினை அதிகரிக்க மாநிலம்

மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இது உதவிபுரியும். தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் சங்கம் என்ற திட்ட மேலாண்மை அலகு ஒன்று தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டு இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.82.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. 2015–16ம் ஆண்டில் ரூ.114.55 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 10.2. மாபெரும் மரம் நடவுத் திட்டம்

மாநிலத்தின் பசுமைப் போர்வையினை அதிகரிக்கவும், மரவளர்ப்பினை பெரிய அளவிலான மக்கள் பங்கேற்பு இயக்கமாக மாற்றவும், 2011–12ஆம் ஆண்டு முதல் 2014–15ஆம் ஆண்டு முடிய மாநிலம் முழுவதுமுள்ள 32 மாவட்டங்களில் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின் கீழ் 1.95 கோடி மரக்கன்றுகள் நடவு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2015–16ஆம் ஆண்டில் 67 லட்சம்

மரக்கன்றுகள் நடும் பணி ரூ.53.72 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 10.3. படுகை நிலங்களில் தேக்கு மரத்தோட்டங்கள் உற்பத்தி செய்தல்

மாநிலத்தில் தடிமர ஆதாரங்களை உருவாக்குவதும், காப்புக்காடுகளுக்கு வெளியே மர அடர்த்திப் பரப்பினை அதிகரிப்பதும், கால்வாயின் கரைகளில் மண் அரிமானத்தைத் தடுப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். 2014–15ஆம் ஆண்டில் ரூ.13.97 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள படுகை நிலங்களில் பராமரிப்புப்பணிகளும், 3,260 எக்டேர் பரப்பில் தேக்குமரத் தோட்ட வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 10.4. 13வது நிதிக்குழு மானியம்

2010–11ஆம் ஆண்டு முதல் 2014–15ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வனங்களைப் பராமரிக்க தமிழ்நாடு வனத்துறைக்கு ரூ.142.48 கோடி மானிய

உதவி வழங்கிட 13வது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளது. வனம் மற்றும் உயிர்ப்பன்மைப் பாதுகாப்பில் மாநிலத்தின் பொறுப்பிற்கு உதவி புரிவதும், நிதி ஆதாரத்தினை வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.35.62 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது.

## 10.5. நீர் வளப்பாதுகாப்பு மற்றும் மர அடர்த்தி மேம்பாட்டுத் திட்டம்

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் பெரிய அளவில் நீர் சேகரிப்புப்பணிகளை மேற்கொள்வதற்கென விரிவானத் திட்டம் ஒன்று ரூ.50 கோடி மதிப்பீட்டில் 2012–13ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மண்ணின் ஈரப்பதத்தினை மேம்படுத்துதல், நிலத்தடி நீரூற்றுக்களை செறிவூட்டல் மற்றும் சாகுபடிப் பணிகளுக்குத் தேவையான நீர்வள இருப்பினை அதிகரித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். 2013–14ஆம் ஆண்டில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

## 10.6. இயற்கைப் பாதுகாப்புத் திட்டம்

கிண்டி தேசியப்பூங்காவில் உள்ள கூண்டுகளை மேம்படுத்துதல், வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்க சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் வைகை அணையிலுள்ள தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரியில் தாவர உண்ணிகளுக்காக தீவனப்பயிர் தோட்டம் ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்துடன் கூடுதலாக 2014–15ஆம் ஆண்டில், சென்னை மாவட்டத்தில் புள்ளிமான்கள் உள்ளிட்ட வன உயிரினங்களை மீட்டு, மறுவாழ்வு மற்றும் இனவிருத்திக் கட்டுப்பாடு, சுசீந்திரம் தேரூர் பறவைகள் பாதுகாப்பகத்திலுள்ள “0” பாயிண்ட் பகுதியிலுள்ள தகவல் தொடர்பு மையத்தினை மேம்படுத்துதல், வன உயிரினக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிமான் குறித்த சூரிய உணிரி விளம்பர பலகைகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் ரூ.1.377 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. 2015–16ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.68.07 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 10.7. வனஉயிரினங்களால் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீடு வழங்குதல்

**10.7.1.** மக்கள்தொகைப் பெருக்கம், நகரமயமாதல் மற்றும் தொழில்மயமாக்கல் காரணமாக வன உயிரின வாழ்விடங்கள் குறைந்து வருவதால் வன உயிரின வாழ்விடங்களின் தரம் குன்றுவதோடு, வன உயிரினங்கள் வனத்தை விட்டு மனித வாழ்விடங்களில் உட்புகுகின்றன. இதனால் மனித–வன உயிரின மோதல்கள் உருவாகின்றன. இதனை எதிர்கொள்ளும் விதமாக போர்க்கால அடிப்படையில் எளிதில் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் உரிய தடுப்புகள் அமைத்தல், தீவன வளங்களைப் பெருக்குதல், வனங்களில் வன உயிரினங்களுக்கு குடிநீர் வசதி செய்து தருதல், மனித உயிரிழப்புகள், காயம், கால்நடைகள், வேளாண் பயிர் மற்றும் உடமைகள் சேதங்களுக்கு உரிய காலத்தில் நிவாரணம் வழங்குதல் போன்றவை இன்றியமையாததாகும். 2011–12ஆம் ஆண்டில் வன உயிரினங்களால் பயிர் மற்றும் பொருட்சேதம் மற்றும் மனித உயிரிழப்புகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையினை அரசு உயர்த்தியுள்ளது.

**10.7.2** மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தரமான ஊனங்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையினை ரூ.1.50 லட்சத்திலிருந்து ரூ.3 லட்சமாகவும், பயிர் சேதங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாகவும் உயர்த்தியுள்ளது. 2014–15ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.4.92 கோடி இழப்பீடாக வழங்க ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. 2015–16ஆம் ஆண்டில் ரூ.3.53 கோடி செலவில் இத்திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 10.8. ஆசிய யானைகளால் ஏற்படும் இழப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

**10.8.1.** மனித–வனஉயிரின மோதல்கள் ஒரு சிக்கலான பிரச்சனையாக இருப்பதால், இதனை மேலாண்மை செய்திட நீர்வளங்களை மேம்படுத்துதல் மூலம் வாழ்விடங்கள் மேம்பாடு, வன உயிரினங்கள் விரும்பி உணவாகக் உட்கொள்ளும் தீவன வளங்களை வனப்பகுதிகளுக்குள் ஏற்படுத்துதல், வன எல்லைகளைச் சுற்றிலும் தடுப்புகள் ஏற்படுத்துதல், கிராம மக்களின் செயல்திறன் வளர்த்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் மனித உயிரிழப்புகள், காயம், கால்நடைகள்,

வேளாண்பயிர்கள் மற்றும் உடமைகள் பாதிப்புகளுக்கு உரிய காலத்தில் இழப்பீடுகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு யுக்திகளைக் கையாள வேண்டும்.

**10.8.2.** மனித–வன உயிரின மோதல்களைத் தடுக்க வன எல்லைகளை ஒட்டி சூரிய மின்வேலி மற்றும் யானை புகா அகழிகள் போன்ற தடுப்புகளை ஏற்படுத்தியது பொது மக்களால் வெகுவாக பாராட்டப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் **2013–14**ஆம் ஆண்டில் வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஆசிய யானைகளால் ஏற்படும் இழப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.**31.35** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கியமான பணியானது, வனங்களுக்கு வெளியில் அதிக அளவில் வெளிவரும் யானைகள் மற்றும் பெரியவகை பாலூட்டியினங்களின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த யானைபுகா அகழிகள் வெட்டப்படுவதாகும். **2013–14**ஆம் ஆண்டில் **637.50** கிலோமீட்டர் நீளத்திற்கு வன எல்லைப் பகுதிகளில் யானை புகா அகழிகள் வெட்டப்படுவதுடன்,

கசிவுநீர்க்குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் நீர்த்தொட்டிகள் அமைத்தல், யானை புகா அகழிகள் பராமரிப்பு, முன்னெச்சரிக்கை அமைப்பு, மின்தடை எச்சரிக்கை மணி அமைப்பு, மயக்க மருந்து செலுத்துதல் (Tranquilizing) மற்றும் வேலூர், சேலம் மற்றும் தர்மபுரி மண்டலப்பகுதிகளில் தொல்லை தரும் யானைகளை இடம்பெயரச் செய்தல் போன்ற பிற பணிகள் ரூ.25.75 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.2.95 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 2015–16ஆம் ஆண்டிலும் திட்டப் பணிகள் தொடர்ந்து செயலாக்கப்படும்.

## 10.9. வனஉயிரின வாழ்விடங்களை மேம்படுத்துல் மற்றும் தீவன வளங்கள் ஏற்படுத்துதல்

யானைகள் நடமாட்டத்தினை வனத்திற்குள்ளேயே கட்டுப்படுத்த, காப்புவனப் பகுதிகளில் பசுந்தீவன வங்கி ஏற்படுத்துதல், யானைகளின் நுண்ணுயிர் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உப்புக் கட்டிகளைப் பயன்படுத்துதல், நீர்க்குழிகள் அமைத்தல், கோடைக்காலங்களில் அவைகளின் நீர்த்தேவைகளை பூர்த்தி செய்ய தடுப்பணைகள் மற்றும்

கசிவுநீர்க்குட்டைகள் அமைத்தல் ஆகிய பணிகளை வனத்துறை மேற்கொண்டுள்ளது. **2011–12** முதல் **2015–16** வரையான ஐந்தாண்டு காலத்தில் ரூ.**20.87** கோடி செலவில் இத்திட்டத்தினை செயல்படுத்திட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. **2014–15**ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.**4.17** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. **2015–16**ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.**2.74** கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

## 10.10. பள்ளிக்கரணை சதுப்புநிலம்

**10.10.1.** பள்ளிக்கரணை சதுப்புநிலப்பகுதி சென்னைப் பெருநகரப்பகுதியில் அமைந்துள்ள தனித்தன்மை வாய்ந்த நன்னீர் சதுப்பு நிலமாகும். இச்சதுப்புநிலப்பகுதி காஞ்சிபுரம் மாவட்டத்தின் பெருங்குடி, பள்ளிக்கரணை மற்றும் துரைப்பாக்கம் ஆகிய கிராமங்களில் அடங்கியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **2002**ஆம் ஆண்டிலேயே இச்சதுப்பு நிலத்தைப் பாதுகாக்க அறிவுறுத்தியுள்ளார். இன்றைய நிலையில் கிட்டத்தட்ட **931.50** எக்டேர் மொத்த சதுப்பு நிலப்பரப்பில்,

**690.65** எக்டேர் சதுப்பு நிலப்பரப்பு வனத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

**10.10.2.** இச்சதுப்பு நிலம் அதன் சூழலியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அதனைப் பாதுகாக்க **2011–12** முதல் **2015–16** வரையிலான ஐந்தாண்டுகளுக்கு வாழ்விட மேம்பாடு, பாதுகாப்பு, ஆராய்ச்சி, கண்காணிப்பு, விளம்பரம், விழிப்புணர்வு போன்ற பல்வேறு மீட்புப்பணிகளை ரூ.**15.75** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒரு விரிவான திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. இப்பகுதியை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவரும் பணிகள் கோடைக் காலத்தில் தங்குதடையின்றி நடைபெறவும், நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நன்கொடை அளிப்பவர்களிடமிருந்து கிடைக்கும் நிதியினைப் பெறவும், 'பள்ளிக்கரணை சதுப்புநில பாதுகாப்பு ஆணையம்' என்ற ஒரு ஆணையம் அரசின் ஒப்புதலுடன் நிறுவப் பட்டுள்ளது. **2014–15**ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.**1.48** கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. **2015–16**ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.**1.48** கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 10.11. திருச்சியில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் அமைத்தல்

வண்ணத்துப்பூச்சியினங்கள் பாதுகாப்பு, யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளைக் கவர திருச்சி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கத்தின் அருகில் மேலணைக்கட்டு காப்புவனப் பகுதியில் ரூ.7.35 கோடி மதிப்பீட்டில் 10 எக்டேர் பரப்பளவில் நட்சத்திர வனம் மற்றும் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்கும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 2.63 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது.

## 10.12. மேம்படுத்தப்பட்ட வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம் நிறுவுதல்

2012–13 முதல் 2014–15 வரையிலான 3 ஆண்டுகளில் வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வளாகத்தில், மேம்படுத்தப்பட்ட வன உயிரின ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ரூ.27.13 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயிரியல் இனப்பெருக்கம், விலங்குகள் பராமரிப்பு அறிவியல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு,

பாதுகாப்புக்கல்வி, மரபியல் பரிணாம வளர்ச்சி பாதுகாப்பு, இடம்பெயரும் பறவைகள், வன உயிரின உயிர்ப்பு ஆகியவற்றிற்கான மையங்கள், வனஉயிரின தடய சோதனைக்கூடம் மற்றும் விஞ்ஞானிகளுக்கு தங்கும் விடுதி போன்றவைகளை உள்ளடக்கியதாக இப்பயிற்சி மையம் விளங்கும். **2014–15**ஆம் ஆண்டில் ரூ.**5.83** கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மீதமுள்ள பணிகள் **2015–16**ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## 10.13. மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம் அறக்கட்டளை

தமிழ்நாடு அரசின் நேரடிப் பராமரிப்பில் மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பக அறக்கட்டளைப் பணிகளைத் தொடர ஆண்டுக்கு ரூ.**2.50** கோடி வீதம் **2013–14**ஆம் ஆண்டு முதல் **2016–17**ஆம் ஆண்டு வரையான **4** ஆண்டுகளுக்கு ரூ.**10** கோடி அனுமதித்து அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. **2014–15**ஆம் ஆண்டில் ரூ.**2.50** கோடி மதிப்பீட்டில் ஆராய்ச்சிப் பணிகள், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பயிற்சித் திட்டங்கள் மற்றும்

சூழல் மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 2015–16ஆம் ஆண்டிலும் இப்பணிகள் தொடரப்படும்.

## 10.14. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர்

**10.14.1** அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா சென்னைக்கு அருகே வண்டலூரில் **602** எக்டேர் வனப்பரப்பில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் **49** வகை பாலூட்டி இனங்கள், **80** வகை பறவையினங்கள் மற்றும் **33** வகை ஊர்வன இனங்கள் ஆக மொத்தம் **162** வகை வன உயிரினங்கள் அடங்கிய **1,672** விலங்குகள் பார்வைக்கு உள்ளன.

**10.14.2.** இப்பூங்கா தொடங்கப்பெற்ற **25** ஆண்டுகளில், வன உயிரினங்களை அதன் வாழ்விடத்தை விட்டு வெளியே பாதுகாக்கும் ஒரு தலைசிறந்த வளாகமாகவும், அரியவகை விலங்குகளான வெள்ளைப்புலி மற்றும் சிங்கவால் குரங்குகள் போன்றவற்றிற்கான இனப்பெருக்க மையமாகவும் உருப்பெற்றுள்ளது. இவ்வுயிரியல் பூங்காவிற்கு ஆண்டுதோறும் சுமார் **23** லட்சம் பார்வையாளர்கள் வருகை தருகின்றனர்.

10.14.3. 2014–15ஆம் ஆண்டில் மறுவாழ்வு மையத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு (மத்திய உயிரியல் பூங்கா அதிகார முகமை) நிதியுதவியாக ரூ.0.58 கோடியும், மாநில அரசின் நிதியுதவியாக அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மேம்பாட்டிற்கு ரூ.0.27 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பூங்கா கால்நடை மருத்துவமனையில் பராமரிப்பு வசதிகளுக்கான மறு வடிவமைப்பு, ஏற்கனவே உள்ள நீலகிரி லங்கூர் கூண்டுகளின் மறு வடிவமைப்பு, துருப்பிடித்த இரும்புக் கதவுகள் மற்றும் தடுப்புச்சட்டங்களை புதிதாக மாற்றியமைத்தல், வரிக்கழுதைப்புலியின் வசிப்பிடத்தினை மாற்றியமைத்தல் மற்றும் நீருக்கடியிலிருந்து முதலைகளைக் காணும் காட்சியகம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்கும் பணி ரூ.4.77 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் நன்கொடையாளர்கள் மூலம் நடத்தப்படும் 'விலங்குகளைத் தத்தெடுக்கும் சிறப்புத்திட்டம்' பொதுமக்களிடையே உயிரினங்களின் மீது பரிவுகாட்டவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஒரு

சிறந்த முயற்சியாக உருவெடுத்துள்ளது. இதுவரை 219 நன்கொடையாளர்களிடமிருந்து ரூ.0.55 கோடி நன்கொடையாக பெறப்பட்டுள்ளது.

## 10.15. வனத்துறையின் பராமரிப்பில் உள்ள யானைகள் மற்றும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான வளர்ப்பு யானைகளுக்கு சிறப்பு நல வாழ்வு மற்றும் புத்துணர்வு முகாம்

**10.15.1.** கோவை மாவட்டத்திலுள்ள தெக்கம்பட்டியில் 11.12.2014 முதல் 27.01.2015 வரை 48 நாட்கள் திருக்கோயில்கள் மற்றும் மடங்களுக்குச் சொந்தமான 30 யானைகளுக்கு சிறப்பு நல வாழ்வு மற்றும் புத்துணர்வு முகாம் தமிழ்நாடு வனத்துறையின் மேற்பார்வையில் நடத்தப்பட்டது.

**10.15.2.** மேலும், இதே போன்று 2014–15ஆம் ஆண்டில் முதுமலையில் உள்ள தெப்பக்காடு, ஆனைமலை, வண்டலூர் உயிரியல் பூங்கா மற்றும் சேலம் குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட சிறப்பு நலவாழ்வு முகாம்களில் வனத்துறையைச் சார்ந்த 54 யானைகள் கலந்து கொண்டன. இதற்கென ரூ.82.00 லட்சம் செலவிடப்பட்டது.

**10.15.3.** திருக்கோயில்கள் மற்றும் மடங்களுக்குச் சொந்தமான யானைகளைப் பொறுத்தவரை, இம்முகாம்கள் துவக்கப்படும் முன்னர் யானைகள் மற்றும் யானைப்பாகன்களின் உடல்நலன் பரிசோதிக்கப்பட்டன. மேலும் புத்துணர்வு முகாமில், முறையான ஊட்டச்சத்து உணவு வழங்கப்பட்டதுடன் உடல்நலனும் பரிசோதிக்கப்பட்டது. மேலும் இம்முகாம் யானைகளின் உளவியல் ரீதியான முன்னேற்றத்திற்கும் இப்புத்துணர்விற்கும் முகாமின் பாகுபாடற்ற மகிழ்ச்சியான சூழலை வழிவகுத்துள்ளது. **2015–16**ஆம் ஆண்டில் வளர்க்கப்பட்டு வரும் யானைகளுக்கு இதுபோன்ற புத்துணர்வு முகாம் நடத்தப்படும்.

**மத்திய அரசின் திட்டங்கள்**

புலிகள் திட்டத்தைத் தவிர இதர அனைத்து மத்திய அரசின் திட்டங்களுக்கு **100** விழுக்காடு நிதியினை மத்திய அரசு வழங்கி வருகிறது. **2014–15**ஆம் ஆண்டில் **39** திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசு **ரூ.21.84** கோடி நிதி அளித்துள்ளது. இந்நிதியினைக் கொண்டு தேசிய பூங்காக்கள்,

வன உயிரினச் சரணாலயங்கள், பறவைகள் சரணாலயங்கள், பாதுகாப்புக் காப்பகம் மற்றும் வனத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து வனப்பகுதிகளிலும் பல்வேறு வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10.16. புலிகள் திட்டம்

**10.16.1.** தமிழ்நாட்டில் புலிகளையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் ஆனைமலை புலிகள் காப்பகம், நீலகிரி மாவட்டத்தில் முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் என 4 புலிகள் காப்பகங்கள் உள்ளன. வேட்டையாடக்கூடிய தலையாய திறன் படைத்த புலிகள் ஆரோக்கியமான சூழலமைப்பின் சின்னமாகத் திகழ்கிறது.

**10.16.2.** இத்திட்டத்திற்காக, மத்திய அரசு 100 விழுக்காடு தொடராச் செலவினத்திற்கும் (Non-recurring), 50 விழுக்காடு தொடரும் செலவினத்திற்கும் (Recurring) நிதியுதவி வழங்கி வருகிறது. தொடரும் செலவினத்தில் மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு மாநில அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. 2014–15ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட ரூ.17.19 கோடி நிதியிலிருந்து வாழ்விடப்பாதுகாப்பு, சூழல் மேம்பாடு, வனஉயிரினப் பாதுகாப்பு, தீத்தடுப்புப் பணிகள், நீராதார மேம்பாடு, சுற்றுலா மேம்பாடு, மனித–வன உயிரின மோதல் கட்டுப்பாடு நடவடிக்கை மற்றும் உள்கட்டமைப்பு வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2015–16ஆம் ஆண்டிலும் இப்பணிகளைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 10.17. யானைகள் திட்டம்

**10.17.1.** நீலகிரியிலுள்ள கிழக்குத் தொடர்ச்சி மலை யானைகள் காப்பகம், கோயம்புத்தூர் யானைகள் காப்பகம், ஆனைமலை யானைகள் காப்பகம் மற்றும் பெரியார் யானைகள் காப்பகம் ஆகிய 4 யானைகள் காப்பகங்களில்

யானைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்காப்பகங்களுக்கென தனியான சட்ட அந்தஸ்து கிடையாது. ஏற்கனவே உள்ள காப்பு வனங்கள் மற்றும் சரணாலயங்களைக் கொண்ட இந்த 4 யானைகள் காப்பகங்கள் நிர்வாக வசதிக்காக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. யானைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வாழ்விட மேலாண்மையில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டம் யானைகளைப் பாதுகாக்கவும், அவற்றின் இருப்பிடங்களை மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**10.17.2.** இத்திட்டத்தின் கீழ் **2013–14**ஆம் ஆண்டில் வனப்பகுதியில் தீத்தடுப்புப் பணிகள், நீராதாரங்களைப் பெருக்குதல், யானைகள் வாழ்விடங்களை மேம்படுத்துதல், யானைகளால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்குதல், யானைகளின் வாழ்விடங்களை மேம்படுத்த பசுந்தீவனப் பயிர்களை வளர்த்தல் போன்ற பணிகள் ஒப்பளிக்கப்பட்ட தொகையான **ரூ.3.17** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **2014–15**ஆம் ஆண்டில்

ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

## 10.18. மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம்

**10.18.1.** மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம் செழுமையான உயிர்ப்பன்மைக்குப் பெயர்பெற்றதாகத் திகழ்கிறது. இராமேஸ்வரம் முதல் தூத்துக்குடி வரையிலான கடலோரப் பகுதிகளில் 21 தீவுகள் இக்காப்பகத்தில் உள்ளன. இங்கு 11 வகை சதுப்பு நிலத்தாவரங்கள், 15 வகை கடல் புற்கள், 117 வகை பவளப்பாறைகள், 290 வகை பறவைகள், 5 வகை கடல் ஆமைகள், 6 வகை திமிங்கலங்கள், 5 வகை டால்பின் மீன்கள், 1 வகை கடல்பசு இனம், 1,145 வகை மீன்கள், 77 வகை தோலில் கண்களுடைய ஒருவகை மீன்கள், 79 வகை நத்தை மீன்கள், 153 வகை சிப்பிகள், 857 வகை சங்குகள் மற்றும் இதர உயிரினங்கள் உள்ளிட்ட சுமார் 4,223 வகையான கடல்வாழ் உயிரினங்கள் காணப்படுகின்றன.

**10.18.2.** மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம், மன்னார் வளைகுடா கடல் தேசியப் பூங்கா மற்றும்

மன்னார் வளைகுடா பவளப்பாறைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ள அரசு நிதி ஒப்பளிப்பு செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடல்சார் சூழலமைப்பில் மனிதத்தலையீடுகளைக் குறைத்தல், கடல் வளத்தை நேரடியாகச் சார்ந்து வாழும் உள்ளூர் மக்களுக்கு மாற்றுவேலைவாய்ப்பு மூலம் வாழ்வாதாரத்திற்கு வழிவகுத்தல், சூழல் மேம்பாட்டுப் பணிகள், இயற்கை வளங்களைப் பாதுகாத்துப் பராமரித்தல், கல்வி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்கு **2014–15**ஆம் ஆண்டில் ரூ.**89** லட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் **2015–16**ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.**2.68** கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.19. தமிழ்நாட்டில் அகஸ்தியர்மலை நிலப்பகுதி

தமிழ்நாட்டில் தேனி மாவட்டத்தின் தேனி வனக்கோட்டம் மற்றும் மேகமலை வன உயிரினச் சரணாலயம், விருதுநகர் மாவட்டத்தின் சாம்பல் நிற

அணில்கள் வன உயிரினச் சரணாலயம், திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட களக்காடு, முண்டந்துறை மற்றும் திருநெல்வேலி வனக்கோட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தின் கன்னியாகுமரி வன உயிரினச் சரணாலயம் ஆகியவற்றின் **2,707.49** எக்டேர் பரப்பினை உள்ளடக்கியதாக அகஸ்தியர்மலை நிலப்பகுதியின் ஒரு பகுதி உள்ளது. இந்நிலப்பகுதி செழுமையான பாலூட்டியின வகைகளைக் கொண்டுள்ளதுடன், அதிகரித்து வரும் புலிகளின் எண்ணிக்கையை கொண்டதாக உள்ளது. மேலும், இப்பகுதி முழுவதிலும் மரபியல் வனவகைகள் உள்ளன. இவ்வகை உயிர்ப்பன்மை முழுவதையும் பாதுகாக்கவும், மரபியல் வேற்றுமை நிறைந்த இனங்கள், ஆராய்ச்சி, கூர்ந்தாய்வு, கல்வி, பயிற்சி மற்றும் உள்ளூர் மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்திடவும் இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. **2014–15**ஆம் ஆண்டில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசு ரூ.**4.53** கோடிக்கு ஒப்புதல் வழங்கி முதல் தவணையாக ரூ.**1.584** கோடி விடுவித்துள்ளது. இத்திட்டம் **2015–16**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலாக்கப்படும்.

**10.20. ஈர நிலப்பகுதி பாதுகாப்பு மற்றும் மேம்பாடு**

வெள்ளப்பெருக்கினைத் தடுக்கவும், கடலோர அரிமானத்தைத் தடுக்கவும், கடல் அலைச்சீற்றம் மற்றும் புயல் போன்ற இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தைக் குறைக்கவும், மழைநீரைத் தேக்கி வைக்கவும், நிலத்தடி நீராதாரங்களைச் செறிவூட்டவும், நீர்வாழ் பறவைகளுக்கு அடைகாக்கும் இடமளிக்கவும், பாலூட்டிகளுக்கு உணவு உறைவிடங்கள் அளிக்கவும், பலவித மாசுக்களை அகற்றவும் கோடியக்கரை, கழுவேலி மற்றும் பள்ளிக்கரணை சதுப்புநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாழ்விட மேம்பாடு, வன உயிரினங்களின் பாதுகாப்பு, சதுப்பு நிலத்தைச் சுற்றிலும் சூழல் மேம்பாட்டுப் பணிகள், உயிரின மேம்பாடு, விழிப்புணர்வு, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு மற்றும் இயற்கைக் கல்வி போன்ற முக்கிய பணிகளுக்கு **2014–15**ஆம் ஆண்டில் ரூ.**1.11** கோடி ஒப்புதலளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **2015–16**ஆம் ஆண்டில் ரூ.**4.05** கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 10.21. தேசிய காடு வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாட்டில், தேசிய காடு வளர்ப்புத் திட்டம் 2002–03ஆம் ஆண்டு முதல், 100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழ் வன வளர்ச்சி முகமைகள் மற்றும் கூட்டு வன மேலாண்மைக் குழுக்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002–03ஆம் ஆண்டு முதல் 2013–14ஆம் ஆண்டு முடிய 70,484 எக்டேர் அளவில், ரூ.112.34 கோடி மதிப்பீட்டில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில், 2,258 எக்டேரில் தோட்டங்கள் வளர்த்தல், 750 எக்டேரில் முன்னோடிப் பணிகள், பராமரிப்புப் பணிகள் போன்றவற்றிற்கு ரூ.8.50 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டது. மத்திய அரசால் முதல் தவணையாக ரூ.4.25 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 10.22. மருத்துவத் தாவரங்களின் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான மேலாண்மை

மருத்துவத் தாவரங்களின் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான மேலாண்மை குறித்த திட்டமானது

மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவி பெறும் திட்டமாகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கருத்துருக்கள் புதுடில்லியில் உள்ள சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், ஆயுஷ் துறை, தேசிய மருத்துவத் தாவர வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 2013–14 தொடங்கி 3 முதல் 5 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு தேசிய மருத்துவத்தாவர வாரியம் ரூ.336.77 லட்சம் மதிப்பீட்டில் 5 கோட்டங்களுக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது. முதல் தவணை நிதியாக ரூ.136.71 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தவணை நிதி ஒதுக்கீடுக்காக ரூ.95.03 லட்சம் மதிப்பீட்டில் பிரேரணை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## 11. வனக்கழகங்கள்

### 11.1. தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 13.06.1974 அன்று இந்திய நிறுவனங்கள் சட்டம், 1956ன் படி திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு நிறுவப்பட்டது. இக்கழகம் ரூ.10 கோடி அங்கீகரிக்கப்பட்ட

முதலீட்டையும், ரூ.5.64 கோடி செலுத்தப்பட்ட முதலீட்டையும் கொண்டுள்ளது. இக்கழகத்தின் மொத்தப்பங்கு முதலீடும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமானதாகும். சுமார் 74,984.05 எக்டேர் பரப்பிலுள்ள காப்புக்காடுகள் மற்றும் பாதுகாப்பு வனங்கள், தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து குத்தகை அடிப்படையில் எடுக்கப்பட்டது. அரசாணையின் படி, குத்தகைத் தொகையாக ஆண்டுதோறும் மொத்த விற்பனைத் தொகையில் 30 விழுக்காடு வனத்துறைக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

### 11.1.2. குறிக்கோள்கள்

தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் கூழ்மரத் தோட்டங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்கள் வளர்த்து, பராமரித்து, அறுவடை செய்வதும், வனங்களின் உற்பத்தியினை அதிகரிப்பதும், ஊரக வேலைவாய்ப்பினை வழங்குவதும், மண் மற்றும் நீர்வளத்தினைப் பாதுகாப்பதும், ஊரக மக்களின் எரிபொருள் மரத்தேவைகளை பூர்த்தி செய்வதுமே இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

**11.1.3. சாதனைகள்**

2013–14 மற்றும் 2014–15ஆம் ஆண்டுகளில் எழுப்பப்பட்ட தோட்டங்கள் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–3 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**11.1.4. கூழ்மரம்**

2013–14 மற்றும் 2014–15ஆம் ஆண்டுகளில் காகித ஆலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட கூழ்மரங்களின் விவரம் இணைப்பு–3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**11.1.5. முந்திரி**

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தில் அதிக அளவு வருவாயை ஈட்டுவதில் முந்திரி இரண்டாவது இடத்தை வகிக்கிறது. வருவாய் ஈட்டப்பட்ட விவரங்கள் இணைப்பு–3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**11.1.6. வருவாய் மற்றும் செலவினம்**

2013–14 மற்றும் 2014–15ஆம் ஆண்டுகளுக்கான கழகத்தின் வருவாய் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 11.1.7. 2015–16ஆம் ஆண்டுக்கான கருத்துருக்கள்

2015–16ஆம் ஆண்டில் எழுப்பப்படவுள்ள புதிய தோட்டங்கள் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 11.2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம், குன்னூர்

சாஸ்திரி – ஸ்ரீமாவோ உடன்படிக்கையின்படி, இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளின் மறுவாழ்விற்காக, சமூகப் பொருளாதார நோக்கத்துடன், தேயிலைத் தோட்டங்களை உருவாக்க 1968ஆம் ஆண்டில், தமிழக அரசால் அரசு தேயிலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டது. பின்னர் தற்போது டான்டீ என்று பலராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இந்திய நிறுவனச் சட்டம், 1956ன் கீழ் ஒரு அரசு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.25 கோடியும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.14.96 கோடியாகும். இக்கழகம் தமிழ்நாடு வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு

எடுத்து **4311.04** எக்டேர் நிலப்பரப்பில் தேயிலைத் தோட்டங்களை நான்கு நிலைகளில் பராமரித்து வருவது குறித்த விவரங்கள் இணைப்பு–5ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 11.2.1. குறிக்கோள்கள்

தேயிலைத் தோட்டங்களை அமைப்பதும், தேயிலைத் தோட்டங்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வளிப்பதும் முக்கிய குறிக்கோள்களாகும்.

### 11.2.2. பசுந்தேயிலை மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலை

**2013–14** மற்றும் **2014–15**ஆம் ஆண்டிற்கான பசுந்தேயிலை மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலையின் செயல் சாதனை விவரங்கள் இணைப்பு–5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 11.2.3. வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

வருவாய் மற்றும் செலவின விவரங்கள் இணைப்பு–5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**11.3. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்**

நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்ட அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத்துறைக்கு சொந்தமான **4160.78** எக்டேர் வன நிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண்வளம், தட்ப வெப்பநிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது. **1956**ஆம் ஆண்டின் இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் **01.08.1984** அன்று, அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டு, **01.10.1984** முதல் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.**10** கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.**8.45** கோடியாகும். இக்கழகத்தின் மொத்த பங்கு முதலீட்டையும் தமிழ்நாடு அரசு தன் வசம் வைத்துள்ளது. இக்கழகத்தில் **280** இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள் உள்ளிட்ட **1,268** நிரந்தரப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 11.3.1. உற்பத்தி மற்றும் நிதி சாதனை

உற்பத்தி மற்றும் நிதி சாதனை விவரங்கள் இணைப்பு–6 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 12. முடிவுரை

சுற்றுச்சூழலுக்கு இணக்கமான ஆற்றல்மிக்க, அறிவார்ந்த முறையில் மேம்பாட்டினை துரிதமாக உருவாக்கி, அதனை நிலையாக வைத்திருக்க வேண்டிய தேவை உள்ளதால், நமது திட்டச் செயல்முறைகள் மற்றும் செயல் திட்டங்களின் ஒருங்கிணைந்த அம்சங்களில் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அறிவார்ந்த வனம் சார்ந்த மேலாண்மையை உறுதி செய்வதற்காக, திட்ட செய்முறைகளை உருவாக்கும்போது அதிகரித்து வரும் சமூக மற்றும் தொழில் நுட்பச் சிக்கல்களையும் கவனத்தில் கொண்டு திட்டங்கள் உருவாக்கப்படுகிறது. சூழல் அமைப்புகளை மீள் உருவாக்கத்திற்கும், அனைவருக்கும் காடுபடு பொருட்கள் கிடைக்கும் வகையில் நீடித்த வளர்ச்சிக்கும், முன்னுரிமை அளிக்கும் சூழல் மேம்பாட்டுத் திட்டங்களை தீவிரப்படுத்தும் அணுகுமுறைகள் அவசியமாகிறது.

நாட்டின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப்பரப்பாக இருக்க வேண்டும் என்ற தேசிய இலக்கை அடைவதற்காக பரந்துபட்ட மரபியல் அடிப்படையுடனும், பல்வகை உயிரினங்களுடனும் கூடிய இம்மாநிலத்தின் இயற்கை வளங்களை நீடித்து நிலைத்திருக்கும் வகையில் பாதுகாத்து மேம்படுத்த முழுமுயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**எம்.எஸ்.எம். ஆனந்தன்**
**அமைச்சர் – வனம்**

## இணைப்பு–1

**வன வருவாய்**

| வ. எண். | வருவாய் – இனங்கள் | 2015–16 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. லட்சங்களில்) |
|---|---|---|
| அ. | சந்தன மரம் | 7,500.00 |
| ஆ. | தடிமரம் | 1,450.00 |
| இ. | தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 400.05 |
| ஈ. | இதர சிறுவனப்பொருட்கள் | 77.50 |
| உ. | பண்ணைக்காடுகள் வளர்த்தல் (மீள அளிக்கப்படும் தொகையைத் தவிர்த்து) | 2,200.00 |
| ஊ. | மூங்கில், முந்திரி, மென்மர முதலிய தோட்டங்கள் விற்பனை | 16.00 |
| எ. | இதர வருவாய்கள் | 3,168.75 |
| | **மொத்தம்** | 14,812.30 |
| | பிடித்தங்களைக் கழிக்க (–) | 510.00 |
| | **ஆக மொத்தம்** | **14,302.30** |

## இணைப்பு–2

**செலவினம்**

| திட்டத்தின் பெயர் | **2015–16**ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சங்களில்) |
|---|---|
| திட்டத்தில் சேராதது | 42,744.43 |
| மாநில வனத்திட்டங்கள் | 19,293.43 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 3,070.95 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் (50:50) | 1,610.85 |
| **மொத்தம்** | **66,719.66** |

## இணைப்பு–3

### தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம்

### சாதனைகள்

| வ. எண். | வளர்க்கப்படும் தோட்ட வகைகள் | செயல் (எக்டேரில்) | | நிதி (ரூ.கோடியில்) | |
|---|---|---|---|---|---|
| | | 2013–14 | 2014–15 | 2013–14 (உள்ளபடி) | 2014–15 |
| 1 | தைலமரம் | 4,054 | 4,223 | 11.64 | 10.78 |
| 2 | முந்திரி | 910 | 893 | 2.73 | 2.37 |

### கூழ்மரம் விநியோகம்

| ஆண்டு | விநியோகம் செய்யப்பட்ட அளவு (மெ.டன்னில்) | வருவாய் (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 2013-14 | 2,27,699.950 | 69.11 |
| 2014-15 | 1,18,901.098 | 40.41 |
| 2015-16 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 1,77,500.000 | 59.55 |

**முந்திரி**

| **ஆண்டு** | **வருவாய் (ரூ.கோடியில் )** |
|---|---|
| 2013-14 | 2.88 |
| 2014-15 | 1.15 |
| 2015-16 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 7.30 |

## இணைப்பு–4

**தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம்**

**வருவாய் மற்றும் செலவினம்**

(ரூ.கோடியில்)

| ஆண்டு | வருவாய் | செலவினம் | லாபம் (+) நட்டம் (– ) |
|---|---|---|---|
| **2013–14** (உள்ளபடி) | 91.64 | 68.42 | (+) 23.22 |
| **2014–15** (திருத்திய மதிப்பீடு) | 81.54 | 59.99 | (+) 21.55 |
| **2015–16** (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 81.92 | 64.09 | (+) 17.83 |

**2015–16ஆம் ஆண்டுக்கான பிரேரணைகள்**

| தோட்டங்கள் | செயல் (எக்டேரில்) | நிதி (ரூ.கோடியில்) |
|---|---|---|
| யூகலிப்டஸ் | 4,600 | 14.18 |
| முந்திரி | 850 | 2.79 |

## இணைப்பு–5

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம்**

**குத்தகைக்கு விடப்பட்ட பகுதி**

| நிலை | ஆண்டு | சாகுபடி பரப்பு (எக்டேர்) | | |
|---|---|---|---|---|
| | | நீலகிரி | ஆனைமலை | மொத்தம் |
| **முதல் நிலை** | 1969 - 1979 | 1,850.74 | .. | 1,850.74 |
| **இரண்டாம் நிலை** | 1979-1981 | 591.10 | .. | 591.10 |
| **மூன்றாம் நிலை** | 1982-1984 | 336.58 | .. | 336.58 |
| நான்காம் நிலை | 1990-1995 | 576.26 | 956.36 | 1532.62 |
| **மொத்தம்** | | **3354.68** | **956.36** | **4311.04** |

**பசுந்தேயிலை மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலை**

(லட்சம் கிலோவில்)

| விவரங்கள் | **2013–14** | **2014–15** |
|---|---|---|
| பசுந்தேயிலை அறுவடை | 375.43 | 390.00 |
| பதப்படுத்தப்பட்ட தேயிலை | 94.80 | 93.60 |

**வருவாய் மற்றும் செலவின விவரங்கள்**

(ரூபாய் கோடியில்)

| **வருடம்** | **தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய்** | **செலவு** | **நிகர லாபம் (+) நட்டம் (–)** |
|---|---|---|---|
| **2013–2014** | 81.77 | 84.08 | (-) 2.31 |
| **2014–2015** | 68.77 | 84.44 | (-)15.67 |

## இணைப்பு–6

**அரசு ரப்பர் கழகம்**

**உற்பத்தி மற்றும் நிதி சாதனை விவரங்கள்**

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2013–14 (உள்ளபடி) | 2014–15 (திருத்திய மதிப்பீடு) | 2015–16 வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| ரப்பர் உற்பத்தி (மெ. டன்னில்) | 1930 | 1838 | 1800 |
| (அ) வருவாய் | 38.81 | 27.60 | 35.76 |
| (ஆ) செலவினம் | 34.60 | 38.79 | 37.45 |
| லாபம் (+)அல்லது நட்டம் (–) | (+) 4.21 | (-) 11.19 | (-) 1.69 |